**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>**

முன்னிலை : திரு.அ.முகம்மது அலி. பி.எஸ்சி., பி.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி, காஞ்சிபுரம்.

2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 31–ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 184/2010</u>**

**<u>C.N.R.No.TNKP07000672/2010</u>**

1.மேரி புஷ்பா (இறப்பு)

(இ.ம.எண்.651/2017 நாள் 19.08.2017 உத்தரவுப்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

2.B.சார்லஸ் பாபு

3.S.மெடில்டா

4.B.பிரான்சிஸ்

5.B.பேசில்,

6. B.எமில்டா ...வாதிகள்

// எதிர்//

1, கிருஷ்ண லீலா (எ) B.K.லீலா குமாரி

2.M/s. Galaxy Properties Pvt. Ltd.,

Rep. By itsDirector, M. Mohammed Ibrahim

3.M/s.AB Accosiates,

Rep. By partner Bharat Kumar Mardia

(இ.ம.எண்.2/2026 நாள் 20.02.2026 உத்தரவுப்படி 3ம் பிரதிவாதி சேர்க்கப்பட்டுள்ளார்.)

..பிரதிவாதிகள்

இவ்வழக்கானது என் முன்பாக கடந்த 13.07.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R.ரகுநாத் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் கடந்த 04.01.2011 தேதியில் ஒருதலைபட்சப்படுத்தப்பட்டும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.கலீல் அகமது அவர்கள் ஆஜராகியும், 3ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.V. சேஷாச்சாரி அவர்கள் ஆஜராகியும், வாதி தரப்பு வழக்குரை, பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை, இருதரப்பு சமாதான மனு மற்றும் ஆவணங்கள் இது

நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

வாதி தரப்பில் இவ்வழக்கானது வழக்கு சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதிகளிடமிருந்து மீட்டு ஒப்படைக்குமாறும், 2ம்பிரதிவாதி மற்றும் அவரது ஆட்களோ, முகவர்களோ வழக்கு சொத்தில் கட்டுமானங்கள் ஏற்படுத்தவோ அதன் இயற்கை அமைப்பை மாற்றி அமைக்கவோ கூடாது என்ற 2ம் பிரதிவாதிக்கு எதிரான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் வழக்கு செலவுத்தொகை செலுத்த வேண்டும் என்பதாக பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வழக்குரையின் சுருக்கம்**

வாதிகள் தரப்பில் வழக்கு சொத்து காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, எண்.27 விட்டவிடாகை கிராமத்தில் நஞ்சை சர்வே எண்.46/2பி யில் 0.70 செண்ட் நிலம் மற்றும் சர்வே எண்.46/2பி யில் ஏக்கர் 2.48 –0.58 செண்ட் நிலமாகும் என்றும், வழக்கு நிலம் மற்றும் சில நிலங்கள் ஆதியில் ஒரு பாஷியம் ஆபிரகாம் நாயுடு என்பவருக்கு பாதியதையாகும் என்றும், மேற்படி ஆபிரகாம் நாயுடுவின் மனைவி ஞானம்மாள் என்றும், மேற்படி ஆபிராகம் நாயுடு என்பவர் கடந்த 65 வருடங்களுக்க முன்பே காலமாகி விட்டார் என்றும், அவரது வாரிசுகள் முறையே ஞானம்மாள், தேவதாஸ் நாயுடு, செபாஸ்டியன் நாயுடு, சாந்தைய நாயுடு (எ) ராஜு, ஜுலியன் ஜோசப், பெர்னாத்தம்மாள், அன்னம்மாள் (எ) செல்லியம்மாள், ஜெபம்மாள் மற்றும் ரோஸ் மேரி என்றும், மேற்படி செபாஸ்டியன் நாயுடு என்பவரும் கடந்த 23.07.1995 –ல் வாதிகளை இந்தியன் இறங்கு உரிமை சட்டத்தின் படி வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டார் என்றும், மேற்படி பாஷியம் ஆபிரகாம் நாயுடு இறந்த பிறகு அவரின் வாரிசுகளான ஞானம்மாள் வகையறாக்கள் கடந்த 17.07.1963 கூர் சீட்டு முன்னிலையில் பாகம் பிரித்து கொண்டனர் என்றும், அவ்வாறு பிரிக்கப்பட்ட கூர் சீட்டில் டி செட்யூல் சொத்து செபாஸ்டியன் நாயுடுவிற்கு ஒதுக்கப்பட்டது என்றும், மேற்படி விட்டவிடாகை கிராமத்தில் நஞ்சை சர்வே எண்.46/2–ல் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.58 செண்ட் நிலம் என்றும், மேற்படி கூர் சீட்டு முன்னிலையில் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.58 நிலங்கள் வாரிசுதாரர்களுக்கு பாக பிரிவினை செய்யப்பட்டது என்றும், அந்த பாக பிரிவினையில் 46/2பி–0.70 செண்ட் நிலமானது தேவதாஸ் நாயுடு என்பவருக்கு பி செட்யூலில் ஒதுக்கப்பட்டது என்றும், அதே போல் 46/2பி–0.58 செண்ட் நிலங்கள் தன்னுடைய தந்தையார் செபாஸ்டியன் நாயுடுவிற்கு ஒதுக்கப்பட்டது என்றும், அதே போல் 46/2பி–0.72 செண்ட் நிலங்கள் சாந்தையார் நாயுடு (எ) ராஜு நாயுடுவிற்கு ஒதுக்கப்பட்டது என்றும், அதே

போல் 46/2பி – 0.58 செண்ட் நிலங்கள் ஜூலியன் ஜோசப் என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றும், அவ்வாறு பாகம் பிரிக்கப்பட்ட நிலங்களை அந்தந்த பாகஸ்தர்கள் சுவாதீனம் அடைந்து ஆண்டு அனுபவித்து வந்தனர் என்றும், மேற்படி தேவதாஸ் என்பவர் தன் பாகத்திற்கு வந்த சர்வே எண்.46/2பி–0.70 செண்ட் நிலங்களை 2ம் வாதிக்கு சரியான பிரதிபலனுக்கு ரூ.41,600/–க்கு பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் முன்னிலையில் கிரயம் செய்துள்ளார் என்றும், மேற்படி கிரைய ஆவணத்தில் தனக்கு கூர் சீட்டு முன்னிலையில் தன் பாகத்திற்கு மேற்படி நிலங்கள் ஒதுக்கப்பட்டதாக தேவதாஸ் நாயுடு என்பவர் குறிப்பிட்டுள்ளார் என்றும், அதன்படியாக மேற்படி கிரைய ஆவணம் முன்னிலையில் வழக்கு நிலங்களை 2ம் வாதி சுவாதீனம் அடைந்து ஆண்டு அனுபவித்து வருவதாகவும், அதே போல் மேற்படி ஜூலியன் ஜோசப் என்பவர் மேற்படி கூர் சீட்டு முன்னிலையில் F செட்யூலில் ஒதுக்கப்பட்ட சர்வே எண்.46/2பி–0.58 செண்ட் நிலங்களை ஒரு பிலோமினா இருதயராஜ் என்பவருக்கு கடந்த 02.05.1987–ல் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் முன்னிலையில் சரியான பிரதிபலனுக்கு கிரயம் செய்துள்ளார் என்றும், அதனால் வழக்கு நிலங்களில் மேற்படி காலம் சென்ற ஜூலியன் ஜோசப்போ அல்லது அவருடைய ஒரே வாரிசான 1ம் பிரதிவாதிக்கோ எந்தவிதமான உரிமையோ, பாத்தியதையோ, சுவாதீனமோ எதுவுமில்லை என்றும், அதே போல் தன்னுடைய தந்தை செபாஸ்டியன் நாயுடுவிற்கு ஒதுக்கப்பட்ட வழக்கு சொத்து சர்வே எண்.46/2பி–யில் 0.58 செண்ட் நிலங்களை குறித்து எந்தவிதமான ஆவணமும் எழுதி வைக்காமல் வாதிகளான தங்களை ஒரே வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார் என்றும், வாதிகள் மேற்படி நிலங்களை சுவாதீனம் அடைந்து ஆண்டு அனுபவித்து வருவதாகவும், மேலும் தாவா நிலங்களில் சர்வே எண்.46/2பியில் 0.70 செண்ட் நிலங்கள் 2ம் வாதிக்கு மட்டும் பாத்தியதையாகும் என்றும், மேற்படி நிலங்களில் தங்களை தவிர பிரதிவாதிகளுக்கோ மற்றவர்களுக்கோ உரிமையோ, பாத்தியதையோ, சுவாதீனமோ எதுவுமில்லை என்றும், மேற்படி சூழ்நிலையில் 1ம் பிரதிவாதியானவர் கடந்த 02.02.2006ல் வழக்கு நிலங்களை எந்தவிதமான உரிமையோ, பாத்தியதையோ இல்லாமல் 2ம் பிரதிவாதிக்கு சட்டவிரோதமாக கிரயம் செய்துள்ளார் என்றும், மேற்படி கிரய ஆவணத்திலும் தங்களுக்கு கூர் சீட்டு முன்னிலையில் பாகத்திற்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றும், ஆனால் மேற்படி கூர் முன்னிலையில் 1ம் பிரதிவாதியின் கணவர் ஜூலியன் ஜோசப்பிற்கு சர்வே எண்.46/2 –ல் 0.58 செண்ட் நிலங்கள் மட்டும்தான் ஒதுக்கப்பட்டது என்றும், அதனையும் அவர் உயிரோடு இருந்த காலத்திலேயே மேற் குறிப்பிட்டவாறு பிலோமினா இருதயராஜ் என்பவருக்கு கடந்த 02.05.1987 ல் கிரையம் செய்துவிட்டார் என்றும், அதனால் வழக்கு

சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும், அதனால் அவர் 2ம் பிரதிவாதிக்கு செய்யப்பட்ட கிரையம் சட்டபடி செல்லுபடி ஆகாது என்றும், அந்த கிரையம் தங்களை கட்டுபடுத்தாது என்றும், அதனால் தாங்கள் 26.10.2007–ல் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பை கொடுத்து சட்டவிரோதமாக சுவாதீனத்தில் இருந்த நிலங்களை சுவாதீனம் ஒப்படைக்க கோரி கேட்டிருந்ததாகவும், அதற்கு பிரதிவாதிகள் பொய்யான சங்கதிகளை கூறி பதில் அறிவிப்பை கொடுத்துள்ளார்கள் என்றும் மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் வழக்கு சொத்துக்கள் குறித்து உரிமை கொண்டாடுவதாலும், சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பில் இருப்பதாலும், இந்த வழக்கினை வழக்கு சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதிகளிடமிருந்து மீட்டு ஒப்படைக்குமாறும், 2ம் பிரதிவாதியோ அவரது ஆட்களோ, முகவர்களோ வழக்கு சொத்தில் கட்டுமானங்கள் ஏற்படுத்தவோ அதன் இயற்கை அமைப்பை மாற்றி அமைக்கவோ கூடாது என்ற 2ம் பிரதிவாதிக்கு எதிரான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் வாதி இறந்துவிட்டதால் அவரது இறப்பு இ.ம.எண்.651/2017 படியாக 19.08.2017ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதியான AB அசோசியேட்ஸ் நிறுவனத்தினர் தாவா சொத்தினை 01.07.2021 தேதியில் 2ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதன் படியாக தன்னை தரப்பினராக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது இந்நீதிமன்றத்தால் இ.ம.எண்.1/2026 என அனுமதிக்கப்பட்டு அதன்படியாக 3ம் பிரதிவாதி இவ்வழக்கில் தரப்பினராக கடந்த 20.02.2026 தேதியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**2. <u>2ம் பிரதிவாதி எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>**

2ம் பிரதிவாதி தரப்பில் வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளப்பட்டவை தவிர மற்றவற்றை வாதியே நிரூபணம் செய்யவேண்டும் என்றும், ஜூலியன் ஜோசப் வழக்கு சொத்தினை 25 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் செய்து வந்து அவரது பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், வாதி வழக்கு சொத்தினை அனுபவம் செய்யவில்லை என்றும், ஜூலியன் ஜோசப் பெயரில் பட்டா ஆவணம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவரது இறப்பிற்கு பின்னர் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், ஜூலியன் ஜோசப் 70 செண்ட் இடத்தினை பிலோமினா இருதயராஜுக்கு ஆவணம் எழுதி கொடுக்கவில்லை என்றும், கடந்த 17.07.1963ல் எழுதி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் கூர் சீட்டு ஒரு பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும், முத்திரை தாள்களில் சட்டப்படி எழுதப்படவில்லை என்றும், வழக்கிற்காக போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும், வழக்கு

நிலங்கள் மற்றும் உள்ள அனைத்து நிலங்களுக்கும் உரிமையாளர் ஜூலியன் ஜோசப் என்பவர் மட்டும் தான் என்றும், மேலும் மேற்படி ஜூலியன் ஜோசப் என்பவர் வழக்கு நிலங்களை குறித்து வருவாய் ஆவணங்கள் அனைத்தையும் தன் பெயரில் மாற்றம் செய்து கொண்டார் என்றும், மேற்படி ஜூலியன் ஜோசப்பிற்கு பிறகு பட்டாவும் 1ம் பிரதிவாதியின் பெயரில் மாற்றம் செய்து கொண்டார் என்றும், வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு எந்த விதமான பாத்தியதையும் இல்லை என்றும், உண்மையில் அப்படி ஒருகால் ஏதாவது வாதிகளுக்கு உரிமை இருந்தால் அந்த உரிமையும் பாதகமான உடமை (Adverse possession) படி தாங்கள் தான் உரிமையாளர்கள் என்றும், அதனால் வழக்கு சொத்து 2ம் பிரதிவாதிக்கு 02.12.2006 கிரைய ஆவணம் முன்னிலையில் தங்களுக்கு மட்டுமே உரிமையும், பாத்தியதையும், சுவாதீனமும் உள்ளது என்றும், மேலும் வாதி விளம்புகை பரிகாரம் கோராமல் சுவாதீனம் மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சட்டப்படி செல்லுபடியாகாது என்றும், மேலும் மேற்படி 02.12.2006 கிரைய ஆவணத்தை ரத்து செய்யாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது நிலைக்கத்தக்கதல்ல என்றும், தாவா நிலங்களை பிரதிவாதிகள் மற்ற நிலங்களோடு சேர்த்து வேலி அமைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு சரியான வழக்கு மூலம் ஏற்படவில்லை என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3.வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் பரிசீலினை செய்து இந்நீதிமன்றத்தால் கடந்த 30.04.2019 தேதியில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.

1. பிரதிவாதிகளிடமிருந்து வழக்கு சொத்தின் மீட்பு பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியதா?

2. 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் கட்டுமானங்கள் மேற்கொள்ளக் கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியதா?

3. வாதிக்கு வழங்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன ?

**4.** வாதிகள் தரப்பில் 2ம் வாதி சார்லஸ் பாபு வா.சா.1–ஆக விசாரிக்கப்பட்டு சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதிகள் தரப்பில் லூயிஸ் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து குறுக்கு விசாரணையின் போது பி.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. எழுவினா 1 முதல் 3க்கான தீர்வு**

1. வா.சா.1–சாட்சியத்தில் வழக்கு சொத்து மற்றும் சில நிலங்கள் ஆதியில் ஒரு பாஷியம் ஆபிரகாம் நாயுடு என்பவருக்கு பாத்தியதையாகும் என்றும், மேற்படி ஆபிரகாம் நாயுடுவின் மனைவி ஞானம்மாள் என்றும், மேற்படி ஆபிராகம் நாயுடு என்பவர் கடந்த 65 வருடங்களுக்கு முன்பே காலமாகி விட்டதாகவும், அவரது வாரிசுகள் முறையே ஞானம்மாள், தேவதாஸ் நாயுடு, செபாஸ்டியன் நாயுடு, சாந்தைய நாயுடு (எ) ராஜு, ஜுலியன் ஜோசப், பெர்னாத்தம்மாள், அன்னம்மாள் (எ) செல்லியம்மாள், ஜெபம்மாள் மற்றும் ரோஸ் மேரி என்றும், மேற்படி செபாஸ்டியன் நாயுடு என்பவரும் கடந்த 23.07.1995 –ல் வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டதாகவும், மேற்படி பாஷியம் ஆபிரகாம் நாயுடு இறந்த பிறகு அவரின் வாரிசுகளான ஞானம்மாள் வகையறாக்கள் கடந்த 17.07.1963 கூர் சீட்டு முன்னிலையில் பாகம் பிரித்து கொண்டதாகவும், அவ்வாறு பிரிக்கப்பட்ட கூர் சீட்டில் டி செட்யூல் சொத்து செபாஸ்டியன் நாயுடுவிற்கு ஒதுக்கப்பட்டதாகவும், விட்டவிடாகை கிராமத்தில் நஞ்சை சர்வே எண்.46/2–ல் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.58 செண்ட் நிலம் வாரிசுதாரர்களுக்கு பாக பிரிவினை செய்யப்பட்டதாகவும், 46/2பி–0.70 செண்ட் நிலமானது தேவதாஸ் நாயுடு என்பவருக்கு பி செட்யூலில் ஒதுக்கப்பட்டதாகவும், அதே போல் 46/2பி–0.58 செண்ட் நிலங்கள் தன்னுடைய தந்தையார் செபாஸ்டியன் நாயுடுவிற்கு ஒதுக்கப்பட்டதாகவும், அதே போல் 46/2பி–0.72 செண்ட் நிலங்கள் சாந்தையார் நாயுடு (எ) ராஜு நாயுடுவிற்கு ஒதுக்கப்பட்டதாகவும்,அதே போல் 46/2பி–0.72 செண்ட் நிலங்கள் சாந்தையார் நாயுடு (எ) ராஜு நாயுடுவிற்கு ஒதுக்கப்பட்டதாகவும், அதே போல் 46/2பி – 0.58 செண்ட் நிலங்கள் ஜுலியன் ஜோசப் என்பவருக்கு ஒதுக்கப்பட்டதாகவும், அவ்வாறு பாகம் பிரிக்கப்பட்ட நிலங்களை அந்தந்த பாகஸ்தர்கள் சுவாதீனம் அடைந்து ஆண்டு அனுபவித்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

2. மேலும் வா.சா.1–சாட்சியத்தில் மேற்படி தேவதாஸ் என்பவர் தன் பாகத்திற்கு வந்த சர்வே எண்.46/2பி–0.70 செண்ட் நிலங்களை 2ம் வாதிக்கு சரியான பிரதிபலனுக்கு கடந்த 05.08.1989–ல் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் முன்னிலையில் கிரயம் செய்துள்ளதாகவும், மேற்படி கிரைய ஆவணத்தில் தனக்கு கூர் சீட்டு முன்னிலையில் தன் பாகத்திற்கு மேற்படி நிலங்கள் ஒதுக்கப்பட்டதாக தேவதாஸ் நாயுடு என்பவர் குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்படி கிரைய ஆவணம் முன்னிலையில் வழக்கு நிலங்களை 2ம் வாதி சுவாதீனம் அடைந்து ஆண்டு அனுபவித்து வருவதாகவும், அதே போல் மேற்படி ஜுலியன் ஜோசப் என்பவர் மேற்படி கூர் சீட்டு முன்னிலையில் F செட்யூலில் ஒதுக்கப்பட்ட சர்வே எண்.46/2பி–058 செண்ட் நிலங்களை ஒரு பிலோமினா இருதயராஜ் என்பவருக்கு கடந்த

02.05.1987–ல் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் முன்னிலையில் சரியான பிரதிபலனுக்கு கிரயம் செய்துள்ளதாகவும், அதனால் வழக்கு நிலங்களில் மேற்படி காலம் சென்ற ஜூலியன் ஜோசப்போ அல்லது அவருடைய ஒரே வாரிசான 1ம் பிரதிவாதிக்கோ எந்தவிதமான உரிமையோ, பாத்தியதையோ, சுவாதீனமோ எதுவுமில்லை என்றும், அதே போல் தன்னுடைய தந்தை செபாஸ்டியன் நாயுடுவிற்கு ஒதுக்கப்பட்ட வழக்கு சொத்து சர்வே எண்.46/2பி–யில் 0.58 செண்ட் நிலங்களை குறித்து எந்தவிதமான ஆவணமும் எழுதி வைக்காமல் வாதிகளான தங்களை ஒரே வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டதாகவும், வாதிகள் மேற்படி நிலங்களை சுவாதீனம் அடைந்து ஆண்டு அனுபவித்து வருவதாகவும், மேலும் தாவா நிலங்களில் சர்வே எண்.46/2பியில் 0.70 செண்ட் நிலங்கள் 2ம் வாதிக்கு மட்டும் பாத்தியதையாகும் என்றும், மேற்படி நிலங்களில் தங்களை தவிர பிரதிவாதிகளுக்கோ மற்றவர்களுக்கோ உரிமையோ, பாத்தியதையோ, சுவாதீனமோ எதுவுமில்லை என்றும், மேற்படி சூழ்நிலையில் 1ம் பிரதிவாதியானவர் கடந்த 02.02.2006ல் வழக்கு நிலங்களை எந்தவிதமான உரிமையோ, பாத்தியதையோ இல்லாமல் 2ம் பிரதிவாதிக்கு சட்டவிரோதமாக கிரயம் செய்துள்ளதாகவும், அதனால் வழக்கு சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும், அதனால் அவர் 2ம் பிரதிவாதிக்கு செய்யப்பட்ட கிரையம் சட்டபடி செல்லுபடி ஆகாது என்றும், அந்த கிரையம் தங்களை கட்டுபடுத்தாது என்றும், அதனால் தாங்கள் 26.10.2007–ல் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பை கொடுத்து சட்டவிரோதமாக சுவாதீனத்தில் இருந்த நிலங்களை சுவாதீனம் ஒப்படைக்க கோரி கேட்டிருந்ததாகவும், அதற்கு பிரதிவாதிகள் பொய்யான சங்கதிகளை கூறி பதில் அறிவிப்பை கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் வா.சா.2 சாட்சியான லூயிஸ் என்பவர் வா.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

3. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1ன் படியாக 02.05.1987 தேதியில் பிலோமினா இருதயராஜ் என்பவருக்கு ஜூலியன் நாயுடு எழுதிக் கொடுத்துள்ள கிரையப் பத்திரம் ஆவண எண்.1459/1987 என்பதாகவும், அதன்படியாக விட்டவிடாகை கிராமம் புல எண்.21/1பி–ல் 26 செண்ட், 21/1பி–ல் 21 செண்ட் மற்றும் 46/2பி–ல் 61 செண்ட் ஆக மொத்தம் 1.08 செண்ட் கிரையம் பெற்றுள்ளதாக காணப்படுகிறது. வா.சா.ஆ.2ன் படியாக 05.08.1989 தேதியில் சார்லஸ் பாபு என்பவருக்கு தேவதாஸ் நாயுடு எழுதிக் கொடுத்துள்ள கிரையப் பத்திரம் ஆவண எண்.2363/1989 என்பதாகவும், அதன்படியாக விட்டவிடாகை கிராமம் புல எண்.19/1பி–ல் 31 செண்ட், 19/1டி–ல் 28 செண்ட், 19/1இ –34 செண்ட், 21/1பி – 24 செண்ட், 25/1பி– 14 செண்ட், 25/1இ– 34 செண்ட், 25/3பி2–10 செண்ட், 28/1– 48 செண்ட்,

45– 35 செண்ட், 46/2பி–70 செண்ட், 47/1–42 செண்ட், 47/3– 50 செண்ட் மொத்தம் 4.20 செண்ட் கிரையம் பெற்றுள்ளதாக காணப்படுகிறது. வா.சா.ஆ.3ன் படியாக 02.12.2006 தேதியில் கிருஷ்ணலீலா என்பவர் M/s.Galaxy Properties Pvt., Ltd., நிறுவனத்திற்கு எழுதிக் கொடுத்துள்ள கிரையப் பத்திரம் ஆவண எண்.11941/2006 என்பதாகவும், அதன்படியாக விட்டவிடாகை கிராமம் புல எண்.20/2ஏ–ல் 0.16.0 ஏர்ஸ், 25/1பி3–0.02.5 ஏர்ஸ், 45/2ஏ–0.04.0 ஏர்ஸ், 46/2ஏ2–0.22.0 ஏர்ஸ், 46/2பி1–0.49.5 ஏர்ஸ், 46/2சி–0.26.0 ஏர்ஸ் ஆக மொத்தம் 1.20.0 ஹக்டேர்ஸ் கிரையம் பெற்றுள்ளதாக காணப்படுகிறது. வா.சா.ஆ.4மற்றும் 5ன் படியாக தாவா சொத்துக்களுக்கு 01.01.1960 முதல் 31.12.1986 மற்றும், 01.01.1987 முதல் 02.07.2009 வரை பெறப்பட்டுள்ள வில்லங்க சான்றிதழ்களாக காணப்படுகிறது. வா.சா.ஆ.6ன் படியாக 09.12.2009 தேதியில் 2ம் பிரதிவாதி நிறுவனத்தின் மூலமாக வாதி வழக்கறிஞருக்கு அனுப்பியுள்ள பதில் வழக்கறிஞர் அறிவிப்பு என்பதாக காணப்படுகிறது. அதன்படியாக 02.12.2006 தேதியில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் சரியானது என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பி.சா.ஆ.1ன் படியாக விட்டாவிடாகை கிராமம் அ பதிவேட்டில் சர்வே எண்.46/2ஏ2, மற்றும் 46/2சி சொத்துக்கள் கிருஷ்ணலீலா பெயரிலும், சர்வே எண்.46/2பி1 மற்றும் 46/2பி3 ஜூலியன் ஜோசப் பெயரில் பதிவு உள்ளதாகவும் காணப்படுகிறது.

4. அதேசமயம் 2ம் பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரையில் கடந்த 17.07.1963ல் எழுதி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் கூர் சீட்டு ஒரு பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும், முத்திரை தாள்களில் சட்டப்படி எழுதப்படவில்லை என்றும், வழக்கிற்காக போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும், வழக்கு நிலங்கள் மற்றும் உள்ள அனைத்து நிலங்களுக்கும் உரிமையாளர் ஜூலியன் ஜோசப் என்பவர் மட்டும் தான் என்றும், மேலும் மேற்படி ஜூலியன் ஜோசப் என்பவர் வழக்கு நிலங்களை குறித்து வருவாய் ஆவணங்கள் அனைத்தையும் தன் பெயரில் மாற்றம் செய்து கொண்டதாகவும், மேற்படி ஜூலியன் ஜோசப்பிற்கு பிறகு பட்டாவும் 1ம் பிரதிவாதியின் பெயரில் மாற்றம் செய்து கொண்டதாகவும், வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு எந்த விதமான பாத்தியதையும் இல்லை என்றும், அதனால் வழக்கு சொத்துக்கள் தங்களுடைய 02.12.2006 கிரைய ஆவணம் முன்னிலையில் தங்களுக்கு மட்டுமே உரிமையும், பாத்தியதையும், சுவாதீனமும் உள்ளதாகவும், தாவா நிலங்களை பிரதிவாதிகள் மற்ற நிலங்களோடு சேர்த்து வேலி அமைத்து அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

5. மேலும் வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது முதல் பிரதிவாதி யார் என்றால் என்னுடைய சித்தி உறவுமுறை ஆவார் என் அப்பாவின் உடன் பிறந்த தம்பியின் மனைவி ஆவார். வழக்கு சொத்து பாஷ்யம் ஆபிரகாம் நாயுடு

என்பவருக்கு சொந்தமானது என்று சொல்லி உள்ளீர்கள் அதற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீங்கள் இந்த வழக்கில் வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்து உள்ளீர்கள் மற்ற வம்சாவழியினரை ஏன் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் ஏற்கனவே கிரையம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள். தேவதாஸ் மற்றும் அன்னம்மாள் ஆகியோர் சொத்தினை கிரையம் செய்து விட்டு சென்றுவிட்டார்கள் ஆகவே அவர்களை வழக்கில் சேர்க்கவில்லை. தேவதாஸ் என்பவர் தான் எனக்கு சொத்தினை எழுதிக் கொடுத்தார். 17.07.1963 அன்று கூர்ச்சிட்டு வாயிலாக உங்களது வகையறாக்கள் சேர்ந்த நபர்கள் வாய்மொழியாக பாகம் குறித்து கொண்டீர்கள் என்று கூறுகிறீர்கள் அந்த கூர்ச்சிட்டினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தை வழக்கில் நீங்கள் குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கூர்சீட்டின் அடிப்படையில் பிரித்துக் கொண்டதாக நீங்கள் சொல்கிறீர்கள் அதனடிப்படையில் வருவாய் ஆவணங்கள் பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற ஆவணங்கள் உங்களுடைய பெயரில் மாற்றிக் கொண்டீர்களா என்றால் மாற்றிக் கொள்ளவில்லை. கூர்ச்சிட்டு உங்களால் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியில்லை. சர்வே எண் 46/2 ல் மொத்த பரப்பளவு 1 ஏக்கர் 58 சென்ட் ஆகும். உங்களிடம் காட்டப்படுகின்ற அந்தப் பதிவேடு ஏ ரிஜிஸ்டர் பதிவேடு. அதில் இரண்டாம் பாகத்தில் 46/2 என்கிற சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 2 ஹெக்டேர் 27.5 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் அது மொத்தம் 5 ஏக்கர் 62 சென்ட் என்றால் தெரியாது. 1 ஹெக்டேர் என்பது 100 ஏர் ஆகும் அதாவது 1 ஏர் என்பது 2.47 செண்ட். 2 ஹெக்டேர் 27.5 ஏர்ஸ் என்பது 5 ஏக்கர் 62 சென்ட் வரும் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணுக்கு எதிராக செபஸ்டின் நாயுடு என்று உங்களுடைய தந்தை பெயர் இருக்கிறதா என்றால் என் தந்தை பெயர் அங்கே குறிப்பிடவில்லை. கிருஷ்ணன் லீலா, ஜூலியன் ஜோசப் அவரது கணவர், ராஜூ நாயுடு ஆகிய மூன்று பேர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி சர்வே எண்ணில் உங்கள் தந்தைக்கு எந்த நிலமும் கிடையாது என்று சொன்னால் சரி இல்லை.. முதல் பிரதிவாதி கிருஷ்ண லீலா பெயரில் முதலில் 22 ஏர் என்றும் மற்றும் 26 ஏர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது ஆக மொத்தம் 48 ஏர் என்றால் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது தான். சர்வே எண் 46/2B1 இல் 49.5 ஏர் என்றும் சர்வே எண் 46/2B2 ல் 24 ஏர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளதுதான். ஆக மொத்தம் 73.5 ஏர் என்றால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது தான். ஜூலியன் ஜோசப் என்பவர் இறப்புக்குப் பிறகு அவருக்கு சொந்தமான சர்வே நம்பர் 46/2B1 ல் 49.5 ஏர் நிலம் அவர் மனைவியான கிருஷ்ணலீலா என்பவருக்கு வாரிசுரிமை அடிப்படையில் வந்து சேர்ந்துவிட்டது என்றால் சரி இல்லை. மேற்படி அந்த நிலத்தை தான் முதல் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து உள்ளார் என்றால் சரியில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

6. மேலும் வா.சா.2 குறுக்கு விசாரணையின் போது ஏற்கனவே ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். வாதிகளை எப்படி தெரியும் என்றால் எனக்கும் அவருக்கும் ஒரு வயது எங்கள் ஊர்க்காரர். நான் டிராக்டர் வைத்திருந்தேன் உழவு செய்வேன் ஆகவே தெரியும். 1963 தேதியிட்ட கூர்சீட்டு எப்படி தெரியும் என்றால் நான் பார்த்துள்ளேன். அப்பொழுது உங்களுக்கு பத்து வயது இருக்கும் ஆகவே உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் நிறைய பஞ்சாயத்து செய்து இருக்கிறேன் ஆகவே எனக்கு தெரியும். தேவதாஸ் என்பவர் சர்வே எண் 46/2Bல் 70 சென்ட் நிலம் ஒரு கிரைய பத்திரம் மூலமாக இரண்டாவது வாதிக்கு விற்பனை செய்து உள்ளார் தெரியுமா என்றால் தெரியும். உங்களிடம் காட்டப்படுவது A ரிஜிஸ்டர் பதிவேடு என்றால் சரிதான். விட்டவிடாகை கிராமத்தினுடைய பதிவேடு என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏ ரிஜிஸ்டர் பதிவேட்டின் படி ஜூலியன் ஜோசப் என்பவருக்கு சர்வே எண் 46/2பி3ல் பரப்பளவு 24 ஏர்ஸ் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

7. இவ்வழக்கானது வாதி தரப்பில் தாவா சொத்து விட்டாவிடாகை கிராம புல எண்.46/2பி–70 செண்ட் மற்றும் 58 செண்ட் இடத்தை பொறுத்து வாதிகளுக்கு சுவாதீன மீட்பு பரிகாரம் கோரியும், மற்றும் 2ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், 2ம் பிரதிவாதி தரப்பில் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், 1ம் பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்துக்களை 2ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் வாதி இறந்துவிட்டதால் அவரது இறப்பு இ.ம.எண்.651/2017 படியாக 19.08.2017ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

8. இந்நிலையில் 2ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை 3ம் பிரதிவாதிக்கு கடந்த 01.07.2021 தேதியில் கிரைய ஆவண எண்.2203/2021 படியாக கிரையம் செய்து கொடுத்துள்ளதன் படியாக 3ம் பிரதிவாதி தரப்பில் தன்னை தரப்பினராக இவ்வழக்கில் சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டு இ.ம.எண்.1/2026 படியாக மேற்படி மனு 30.01.2026ல் அனுமதிக்கப்பட்டு பின்னிட்டு 20.02.2026 தேதியில் 3ம் பிரதிவாதி இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்ய நிலுவையில் இருந்து வந்தபோது 2 முதல் 5 வாதிகள் 3ம் பிரதிவாதியிடம் சமரசமாகி சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி சமாதான மனுவில் வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி சாட்சியம் அளித்து அதன்படியாக 2 முதல் 5 வாதிகள் பிரதிவாதியிடமிருந்து தலா ரூ.2,00,000/– வீதம் மொத்தம் ரூ.10,00,000/– தொகை பெற்றுக் கொண்டுள்ளதாகவும், 3ம் பிரதிவாதி தாவா சொத்தினை பொறுத்து முழு உரிமையாளர் என்பதை ஒப்புக் கொள்வதாகவும், மற்றும் கிரைய ஆவணங்கள் 12.12.2006 தேதியிட்ட ஆவண எண்.11941/2006 மற்றும் 01.07.2021 ஆவண எண்.2203/2021 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கது என்பதாக ஒப்புக் கொண்டு இரு தரப்பினரும் சமரசம் செய்து கொண்டுள்ளதாக காணப்படுகிறது.

9. இந்நிலையில் மேற்படி சமரசமானது நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இ.ம.எண்.03/2026 கடந்த 31.07.2026 தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் இடையே சமரசம்படியாக சமாதான மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களை பொறுத்து தாவா சொத்துக்களில் பின்னிட்டு உரிமை எதுவும் ஏற்படவில்லை என்பதால் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் சமரசம் படியாக தாவா சொத்து 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்தினை பொறுத்து ஏற்பட்டுள்ள கிரைய ஆவணங்கள் 12.12.2006 தேதியிட்ட ஆவண எண்.11941/2006 மற்றும் 01.07.2021 ஆவண எண்.2203/2021 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கது என்பதாகவும் இந்நீதிமன்றம் முடிவு செய்து வாதியின் இவ்வழக்கு தள்ளுபடிக்கு உரியது என்பதாக எழுவினா 1 முதல் 3க்கு தீர்வு செய்யப்படுகிறது.

இறுதியாக 2 முதல் 5 வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி இடையே ஏற்பட்டுள்ள சமாதான உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, மேற்படி சமாதான உடன்படிக்கை சரத்துக்கள் தீர்ப்பாணையின் அங்கமாக கருதவேண்டும் என்றும், அதன்படியாக இவ்வழக்கு செலவுத் தொகை இன்றி தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 31.07.2026 இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்./அ.முகம்மது அலி
கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.

1. வாதி தரப்பு சாட்சிகள்:

1. வா.சா.–1 சார்லஸ் பாபு (2ம் வாதி)

2.வா.சா.–2 லூயிஸ்

2. வாதி தரப்பு சான்றாவணங்கள் :

| வ. எண் | குறியீடு | தேதி | ஆவண விவரம் |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 02.05.1987 | ஜூலியன் ஜோசப் என்பவர் பிளோமினா என்பவருக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| 2. | வா.சா.ஆ.2 | 05.08.1989 | தேவதாஸ் என்பவர் சார்லஸ் பாபுவுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |

| | | | |
|---|---|---|---|
| 3. | வா.சா.ஆ.3 | 02.12.2006 | 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் நகல். |
| 4. | வா.சா.ஆ.4 | 04.07.2009 | வழக்கு சொத்து குறித்த வில்லங்க சான்றிதழ் கணிணி நகல். |
| 5. | வா.சா.ஆ.5 | 04.07.2009 | வழக்கு சொத்து குறித்த வில்லங்க சான்றிதழ் கணிணி நகல். |
| 6. | வா.சா.ஆ.6 | 09.12.2009 | 1, 2 பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அசல். |

3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்: இல்லை

4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்

| வ. எண் | குறியீடு | தேதி | ஆவண விவரம் |
|---|---|---|---|
| 1 | பி.சா.ஆ.1 | | விட்டாவிடாகை கிராமத்தின் அ பதிவேடு கணிணி நகல். |

ஒம்./அ.முகம்மது அலி
கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.